## ⸙ கேள்வி:

# "கிருபையினின்று விழுவது சாத்தியமென்றால், ஒரு கிறிஸ்தவருக்கு என்ன உறுதியிருக்க வேண்டும்?"

## ⸙ பதில்:

*கிறிஸ்தவராயிருப்பவர் கிருபையினின்று விழக் கூடுமென்று நாம் போதிக்கிறோம். ஆனால், வேறு பலர், கிறிஸ்தவராயிருப்பவர் விழுந்துபோவது சாத்தியமில்லை என்று போதிக்கின்றனர். புகழ்பெற்ற ஒரு நாமகரணக் கூட்டத்தின் பிராந்திய சபை ஒன்று தனது நம்பிக்கைகளின் பட்டியலில் பின்வருவதையும் இணைத்திருக்கிறது: "விசுவாசிகளின் நித்திய பாதுகாப்பை நாம் நம்புகிறோம்; தேவனுடைய குடும்பத்தில் பிறந்த ஒருவர் இழக்கப்படுவதென்பது நடைபெறவே முடியாத ஒன்றாகும்." விசுவாச விலக்கம் சாத்தியமல்ல என்பதை நம்புகிற மக்கள், "மறுபடியும் பிறந்த ஒருவர் தமது பரலோக வீட்டை இழந்துபோக முடியுமென்று நீங்கள் நம்பினால், இரட்சிப்புக்கு ஏதாவது உத்தரவாதத்தை நீங்கள் எப்படிப் பெற முடியும்?" என்று கேட்பதுபோல் தோன்றுகிறது.*

*உண்மையில், விழுந்துபோகக்கூடிய சாத்தியக் கூறுகளானவை, நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோமா என்று நம்மை வியப்படையக் கூடச் செய்கின்றன. "ஆசீர்வாதம் நிச்சயம்" என்று பாடல் பாடுகின்றோம், ஆனால் அதன் நிச்சயத்தைப் பார்க்கிலும் அதிகமாய் நாம் சந்தேகம் கொண்டுள்ளோம். "நாம் செய்துள்ள பாவங்களைத் தேவன் மன்னிக்கக் கூடுமா?"; "இரட்சிப்புக்குப் போதுமானவைகளை நான் செய்கிறேனா?"; "இப்பொழுது மரிக்க நேர்ந்தால், நான் பரலோகம் செல்ல முடியுமா?" என்றெல்லாம் நாம் வியப்படையலாம். நம்மிடத்தில், பரலோகம் செல்வோமா இல்லையா என்று கேட்கப்*

பட்டால், "நான் போவேன் என்று நம்புகிறேன்" என்றோ அல்லது "நான் போவேன் என்று எண்ணுகிறேன்" என்றோ நாம் பதில் சொல்லக் கூடும். நமது மொழி இதில் உண்மையான நிச்சயம் எதனையும் வெளிப்படுத்துவதில்லை.

விசுவாச விலக்கம் சாத்தியமானது என்று நம்பினால், இவ்வகையான உணர்வுகளை மேற்கொள்வது எப்படி? நாம் எவ்விதம் ஒரு நிச்சயத்தைப் பெற இயலும்?

## கிறிஸ்தவர்கள் கிருபையினின்று விழக் கூடும்

கிறிஸ்தவர்கள் கிருபையினின்று விழக் கூடும். ஏன் நாம் இவ்வாறு கூறுகிறோம்? ஏனென்றால் வேதாகமம் இவ்வாறு கூறுகிறது.

*கிருபையினின்று விழுவது சாத்தியமே.* கிருபையினின்று விழுவதற்கெதிராக கிறிஸ்தவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்: "இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன்" (1 கொரி. 10:12). பவுல் கூட, தாம் விழுந்து போகக்கூடுமென்று சொன்னார் (1 கொரி. 9:27).

*கிருபையினின்று விழுவதென்பது உண்மையான, மிக மோசமான அபாயமாகும்:* "ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக் கப்பட்டும், பரம ஈவை ருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும், இனிவரும் உலகத்தின் பலன்களையும் ருசிபார்த்தும், மறுதலித்துப் போனவர்கள். …மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்" (எபி. 6:4-6). இந்த மக்கள் விழுந்துபோவதற்கு முன்பு இரட்சிக்கப்பட்டவர்கள், இங்கு கூறியுள்ள ஐந்தில் இரண்டு பண்புகள், அவர்கள் பிரகாசிப்பிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியைப் பெற்றவர்கள் என்று சொல்கிறது - இது கிறிஸ்தவர்களாய் இருப்பவர்கள் அல்லது கிறிஸ்தவர்களாயிருந்தவர்களுக்கு மட்டுமே சொல்லப்படக் கூடியதாகும்.

*கிருபையினின்று விழுதல் என்பது உண்மையில் நடந்த விஷயமாகும்.* கலாத்தியர் 5:4ல் "நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவை விட்டுப் பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள்" என்று

கூறப்படுகிறது. இது, கிருபையினின்று விழுதலின் சாத்தியத்தை மட்டுமல்ல, அது உண்மை நிகழ்ச்சி என்பதையும் வெளிப் படுத்துகின்றது. சிலருக்கு இது நேர்ந்துள்ளது!

கிருபையினின்று விழுதல் என்பது அழிவுக்கு வழிகாட்டுகிறது. யாக்கோபு, "சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொரு வன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்" என்று கூறுகிறார் (யாக். 5:19, 20). யாக்கோபு கிறிஸ்தவர்களுக்கு (சகோதரர்களுக்கு) இதை எழுதினார். அவர், கிறிஸ்தவர்கள் கூட பாவம் செய்யக்கூடும் (சத்தியத்தை விட்டு விலகக் கூடும்) என்றார்; அவர்கள் மனமாற்றப்பட அல்லது மாற்றப்படக் கூடும். இது நடக்குமென்றால் அப்படி பாவம் செய்தவரை ஒருவர் மீட்கும் போது மரணத்திலிருந்து அவரை மீட்டு எடுக்கிறார். எனவே, அவரது பாவம் அவரை மரணத்துக்குள்ளாகத் தீர்த்திருந்தது என்பது தெளிவாகிறது.

கிறிஸ்தவர்கள் பாவம் செய்யக் கூடும்; அவர்கள் விழுந்து போகக் கூடும்; அவர்கள் நித்தியத்திற்கும் விழுந்து போகும்படி பாவம் செய்யக் கூடும். விசுவாச விலக்கம் என்பது உண்மையில் சாத்தியமான ஒன்றேயாகும்.

## கிறிஸ்தவர்கள் ஒரு நிச்சயத்தைப் பெறக் கூடும்

முதலாவதாக, நாம் இரட்சிக்கப்பட்டிருப்பது உறுதியான தால், நாம் நிச்சயத்தைப்பெறக் கூடும். புதிய ஏற்பாட்டில் இரட்சிப்புக்கான திட்டம் மிகவும் தெளிவாக உள்ளது. நாம் கிருபையினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (எபே. 2:8, 9); அதுவும் கூட கிறிஸ்துவின் இரத்தத்தினால் இரட்சிக்கப் பட்டிருக்கிறோம் (எபே. 1:7). இரட்சிக்கப்படுவதற்கு, இயேசுவை தேவனுடைய குமாரன் என்றும், நமது கர்த்தர் என்றும் நாம் விசுவாசித்து, அவரில் உள்ள விசுவாசத்தை அறிக்கையிட மனதுள்ளவர்களாயிருக்க வேண்டும் (ரோமர் 10:9, 10). மேலும், நாம் மனந்திரும்பி அல்லது நமது பாவங் களிலிருந்து திரும்பி (லூக். 13:3; அப். 17:30) வாழ வேண்டும். மேலும், நாம் இரட்சிப்படைய ஞானஸ்நானம் பெற

*வேண்டும் (அப். 2:38; 22:16).*

*இவையெல்லாம் செய்த பிறகுதான், நாம் இரட்சிக்கப் பட்டதின் நிச்சயத்தைப் பெற முடியும். விசுவாசம், மனந் திரும்புதல் இவைகளைத் தொடர்ந்து ஞானஸ்நானம் பாவங்களுக்கு மன்னிப்பைப் பெற்றுத் தருகிறது (அப். 2:38) ... பாவங்கள் நீங்கக் கழுவப்படுகிறோம் (அப். 22:16) ... இரட்சிப்படைகிறோம் (1 பேது. 3:21) ... கிறிஸ்துவுக்குள்ளாகி, கிறிஸ்துவைத் தரித்துக் கொள்ளுகிறோம் (கலா. 3:27).*

*புதிய ஏற்பாட்டின் நூல்களை கிறிஸ்தவர்களுக்கு எழுதிய வர்கள், அவைகளை யாருக்கு எழுதினார்களோ அவர்கள் இரட்சிப்பு பெற்றதைக் குறித்து எவ்வித சிறிய சந்தேகமும் காண்பிக்காமலே எழுதினார்கள். பவுல், கலாத்தியர்களுக்கு, "நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத் தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே" என்று கூறினார் (கலாத். 3:26, 27). அவர், கொலோசெயர்களுக்கு, "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்தரிக்கிறோம். குமாரனாகிய அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" என்று எழுதினார் (கொலோ. 1:13, 14). பேதுரு, தாம் எழுதிய மக்களுக்கு, அவர்கள் "மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டதாக" எழுதினார் (1 பேது. 1:4). மேலும் தொடர்ந்து, "ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து ... அழிவுள்ள வித்தினாலேயல்ல, என்றென்றைக்கும் நிற்கிறதும், ஜீவனுள்ளதுமான தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே மறுபடியும் ஜெநிப்பிக்கப்பட்டிருக்கிறீர்களே" என்று எழுதினார் (1 பேது. 1:22, 23), யோவான், "நாம் தேவனு டைய பிள்ளைகளென்று அழைக்கப் படுவதினாலே பிதாவான வர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள் ..." என்று எழுதினார் (1 யோவா. 3:1).*

*தாங்கள் இரட்சிக்கப்பட்டதைப் பற்றி, புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்கள் இவ்வளவு நிச்சயமாயிருந்தார்களென்றால், நாமும் அதே அளவு நிச்சய*

முடையவர்களாயிருக்க வேண்டும். சுவிசேஷத்திற்கு நாம் கீழ்ப்படிந்திருந்தால் - நாம் விசுவாசித்து, மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று முழுகுதல் ஞானஸ்நானம் பெற்று இருந்தால் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்ற நிச்சயம் எவ்விதத்திலும் சந்தேகமின்றி ஏற்பட்டிருக்கும்! நாம், "நான் இரட்சிக்கப்பட்டுள்ளேன், நான் மறுபடியும் பிறந்துள்ளேன், நான் தேவனுடைய பிள்ளையாகியுள்ளேன், நான் சபையின் அங்கமாக மற்றும் தேவனுடைய இராஜ்யத்தின் குடிமகனாக ஆகியுள்ளேன்" என்று கூற முடியும்.

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைச் சுட்டிக்காட்டக்கூடிய நிலையில், "விசுவாசம் மட்டுமே இரட்சிக்கக் கூடும்" என்று நம்பக் கூடியவர்களைக் காட்டிலும் உண்மையில் அதிக சிலாக்கியம் உள்ளவர்களாய் நாம் இருக்கிறோம். பலர், கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளும் பொழுதோ அல்லது "கிறிஸ்துவைத் தமது இருதயத்தில் வரவேற்கும் பொழுதோ" ஒருவர் இரட்சிக்கப்படுகிறார் என்ற கருத்தையுடையவர்களா யுள்ளனர். ஆனால், "கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட" அந்த ஒரு கணம் மாத்திரமே அவர்களது இரட்சிப்பின் நினைவடை யாளமாய் உள்ளது. இவ்வாறாக அவர்கள் வாழ்க்கையின் பிற்பகுதியில் - உதாரணமாக, அவர், பாவம் செய்கையில்- முதலில் அவர் இரட்சிப்படைந்திருந்தாரா என்று சந்தேகம் உண்டாகி விடுகிறது.

ஆனால் ''கிறிஸ்துவை நமது இருதயங்களில் ஏற்றுக் கொண்டோமா" என்று தவறக் கூடிய நமது நினைவாற்றலைச் சார்ந்து நாம் இருப்பதில்லை; நமது வாழ்வில் ஒரு குறிப்பிட்ட நாளில் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற அன்று இரட்சிக்கப்பட்டோம் என்று நினைவு வைத்திருப்பது மிகவும் எளிய ஒன்றாகும். ஆகவே, சுவிஷேத்திற்குக் கீழ்ப்படிகின்ற போது நாம் இரட்சிக்கப்படுகிறோம் என்ற புதிய ஏற்பாட்டு உபதேசமானது, ''கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட போது'' அல்லது ''கிறிஸ்துவை நமது இருதயத்தில் வரவேற்கின்ற போது'' இரட்சிக்கப்படுகிறோம் என்ற வேத ரீதியல்லாத உபதேசத்தைக் காட்டிலும் அதிக நிச்சயத்தைத் தருகிறது.

இரண்டாவதாக, நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்பது உறுதியாகையால், நாம் ஒரு நிச்சயத்தைக் கொண்டிருக்க முடியும். கிறிஸ்தவர் ஒருவர் கிருபையினின்று விழக் கூடும் என்பதால், கடந்த காலத்தில் பெற்றுக்கொண்ட

இரட்சிப்பின் நிச்சயம் இன்றைக்கு நமக்குத் தேவையான நிச்சயத்தை அளிப்பதில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். ஒரு நாளில் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கலாம், ஆனால் வேறொரு நாளில் இழந்து போகவும் படலாம். இப்பொழுது நாம் இரட்சிக்கப்பட்ட நிலையில் இருக்கிறோம் என்று எவ்விதம் உறுதியாய்க் கூற இயலும்? குறைந்தது பின் கண்ட இரண்டு காரணங்களுக்காக நாம் இன்று அந்த உறுதிப்பாட்டைக் கொண்டுள்ளோம் என்று கூற முடியும்.

*நம்மை விசுவாசமுள்ளவர்களாகக் காத்துக்கொள்ள தேவன் செய்தவைகளினால் அந்த நிச்சயத்தை பெற முடியும்.* தேவன் அவரிடமிருந்து நாம் திரும்பிச் செல்வதை விரும்புவதில்லை, எனவே நாம் விசுவாசத்தில் நிலைத்திருக்கத் தேவையான வற்றை அவர் நமக்குத் தருகிறார். *அவர் தமது பிள்ளைகளுக்கு ஒரு அன்பான தகப்பனைத் தந்துள்ளார்.* "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்; ..." (1 யோவா. 3:1).

*நமக்காகப் பரிந்து பேச ஒரு மத்தியஸ்தரைத் தந்துள்ளார்.* "... ஒருவன் பாவஞ் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1 யோவா. 2:1). கிறிஸ்து நமக்கும் தேவனுக்கும் மத்தியஸ்தராயிருக்கிறார் (1 தீமோ. 2:5).

*ஒரு பரிசுத்த விருந்தாளியைத் தந்துள்ளார்.* "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்" (கலா. 4:6; அப். 2:38; 5:32). நமக்குள் தங்கியுள்ள பரிசுத்த ஆவியானவர் நமது சுதந்தரத்தின் அச்சாரமாகத் தரப்பட்டுள்ளார் (எபே. 1:13, 14). அவர் நம்மைப் பலப்படுத்துகிறார் (எபே. 3:16), நாம் ஆவியின் கனிகளைத் தரும்படி செய்கிறார் (கலா. 5:22, 23).

*ஊக்கமூட்டும் ஒரு ஐக்கியத்தைத் தந்துள்ளார்.* தேவன் நம்மை சபையிலே சேர்த்துக் கொண்டார் (அப். 2:47), விசுவாசிகளின் இந்த ஐக்கியமானது அங்கத்தினர்களை குறைந்தபட்சம் விசுவாசத்தில் நிலைத்திருக்கச் செய்கிறது. சபையில், "அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து, சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல் ஒருவருக்

கொருவர் புத்தி சொல்லக் கடவோம்" (எபி. 10:24, 25).

*உதவியளிக்கும் செய்தி.* வேதாகமமானது, "... பரிசுத்த மாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத் தைக் கொடுக்கவும் வல்லவராயிருக்கிற தேவனுடைய கிருபையுள்ள வசனத்தைக்" கொண்டுள்ளது (அப். 20:32). இயேசுவுக்குள் உள்ள மிக நல்ல முன் உதாரணத்தினாலும், நீதியுள்ள வாழ்வை மேற்கொள்ள வல்லமையாய் நம்மை ஊக்குவிப்பதினாலும் தெளிவான அறிவுரைகளை அது நமக்குத் தருகிறது.

*பரலோகத்தின் ஊழியர்கள்.* தூதர்கள், "இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்களின் நிமித்தமாக ஊழியம் செய்யும் படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்கள்" (எபி. 1:14). அது நாமே! தூதர்கள் நமக்காக பணிவிடை செய்கின்றனர்.

*ஜெபத்தின் சிலாக்கியம்.* இயேசு, "கேளுங்கள், அப் பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப் பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்" என்று நமக்கு கூறுகிறார் (மத்தே. 7:7; 1 யோவா. 5:15). கிறிஸ்தவர்களுக்கு, ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் என்ற வாக்குறுதி உள்ளது!

*அருமையான வாக்குத்தத்தங்கள்.* நாம் விசுவாசத் துடனிருக்க ஊக்குவிப்பதற்கு தேவன் நமக்கு வாக்குத் தத்தங்கள் அளித்துள்ளார் - அவைகளில், கிறிஸ்தவர்களுக்கு சகலமும் நன்மைக் கேதுவாக நடக்கிறது என்பதும் (ரோமர் 8:28), நமது திராணிக்கு மிஞ்சி சோதிக்கப்படுவதற்கும் அவர் அனுமதிக்க மாட்டார் என்பதும் (1 கொரி. 10:13), உலகத்தில் எதுவும் நம்மை கிறிஸ்துவின் அன்பைவிட்டுப் பிரிக்க மாட்டாது என்பதும் (ரோமர் 8:35-39) அடங்கும்.

*தேவன் கேட்பவைகளில் நாம் தவறுகின்றபோது, தேவன் நமக்கு மன்னிப்பை வைத்துள்ளதால் நாம் ஒரு நிச்சயத்தைப் பெற்றுள்ளோம்.*

நமது தொடர்ச்சியான இரட்சிப்பு ஒரு வகையில் நம்மைப் பொறுத்துள்ளது. தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற நம்மால் முடிந்த மிகச் சிறந்தவைகளை நாம் செய்ய வேண்டும். ஆனால் இது கிறிஸ்தவர்களாயிருப்பது நம்மை மட்டுமே பொறுத்துள்ளது என்று பொருள்படுமா? இல்லை. ஏனெனில் நாம் வைராக்கியம், ஜாக்கிரதை, விசுவாசம் இவைகளைப் பெற

கர்த்தரே நமக்கு உதவுகிறார்.

ஆனால், தேவன் நாம் விசுவாசத்துடனிருக்க உதவியளிக்கிறார் என்பதில் மட்டும் நமது நிச்சயம் அமைந்து விடவில்லை. அவருடைய சித்தத்தை நிறைவேற்ற நாம் தவறுகின்றபோது மன்னிப்பையும் அவர் அளிக்கிறார் என்பதிலும் இது அடங்கியுள்ளது. குறிப்பாக, இயேசுவின் இரத்தம் நமது பாவங்களை நீக்கி நம்மை சுத்திகரிக்கிறது என்ற வாக்குத்தத்தம் நமக்குண்டு: "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1 யோவா. 1:7). நாம் பாவமற்ற வாழ்க்கை வாழுகிறதினால் அல்ல, ஆனால் இயேசுவின் இரத்தம் நம்மை நம் பாவங்களிலிருந்து தொடர்ந்து சுத்திகரிப்பதினாலேயே நாம் நமது தற்போதைய இரட்சிப்பைப் பெற்றுக் கொள்கிறோம்!

நமது பாவமற்ற தன்மையைச் சார்ந்திருக்கவோ, தேவனுடைய பிரமாணங்களுக்கு முழுமையாகக் கீழ்ப்படிதல் மற்றும் நம் சொந்த நீதியைச் சார்ந்திருத்தல் ஆகியவை இல்லாமல் இருந்தால் நல்லதுதான். அப்படியிருந்தால், நம்மில் யாருமே இரட்சிக்கப்பட முடியாது. ஏனென்றால் நம்மில் யாரும் பாவமில்லாமல் வாழ்கிறதில்லை! நம்மை நாம் சார்ந்திருக்க இயலாது. மன்னிப்புக்கு நாம் தேவனுடைய கிருபையைச் சார்ந்திருக்க வேண்டும். ஆனால், அந்த கிருபை நமக்குக் கிட்டியுள்ளதால் தேவனுக்கு நன்றி. ஒளியிலே தொடர்ந்து நடக்கும்பொழுது நாம் தேவனுடைய கிருபையினாலும், இயேசுவினுடைய இரத்தத்தினாலும் தொடர்ந்து இரட்சிக்கப்படுகிறோம்.

இவற்றிற்கெல்லாம் பொருள் என்ன? இப்பொழுதே, இங்கேயே நாம் இரட்சிக்கப்பட்டுள்ளோம் என்று அறியக்கூடும் என்பதே இதன் பொருள் ஆகும்! நீங்கள் இரட்சிக்கப்பட்டதாக எப்பொழுதுமே சொல்ல முடியாது என்ற கருத்து புதிய ஏற்பாட்டில் இருந்து வந்ததல்ல. யோவான், "உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் நீங்கள் விசுவாசமாயிருக்கவும், தேவகுமாரனுடைய நாமத்தின்மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதியிருக்கிறேன்" (1 யோவா. 5:13) என்று எழுதினார். இந்த வாக்குத்தத்தம் நிபந்தனையற்றதல்ல

என்பது தெளிவு, ஆனால் யோவானின் கூற்றுப்படி, நமக்கு நித்திய ஜீவன் உண்டு என்பதை நாம் அறியக்கூடும் என்பதும் தெளிவு: எனவே, இப்பொழுதே நாம் இரட்சிக்கப் பட்டுள்ளோம் என்பதை நாம் அறிய முடியும். யாரேனும், "நீங்கள் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா?" என்று உங்களிடத் தில் கேட்டால், நீங்கள் உங்களால் முடிந்த அளவு விசுவாச வாழ்க்கையை வாழும் பட்சத்தில், "நிச்சயமாக! நான் இரட்சிக்கப்பட்டுள்ளேன் என்பது எனக்குத் தெரியும்" என்று பதில் கூற முடியும்!

நாம் இரட்சிப்படைவோம் என்பது உறுதியாகையால், நாம் ஒரு நிச்சயத்தைப் பெறமுடியும். இப்பொழுது இரட்சிக்கப்பட்டுள்ளோம் என்று நாம் நம்பியிருந்தாலும், நித்திய இரட்சிப்பை நாம் அடைவோமா என்பதில் உறுதியற்றுக் காணப்படலாம். "நான் மரிக்கும்போது, இரட்சிப்படைவேன்" என்றோ "நான் பரலோகம் செல்கிறேன், அதில் ஐயம் எதுவுமில்லை" என்றோ சொல்ல நாம் தயங்கலாம்.

பவுல் தம்முடைய நித்திய இரட்சிப்பைப்பற்றி எவ்வித சந்தேகமும் இல்லாதிருந்தார். அவர் தமது வாழ்க்கையின் முடிவை நெருங்கியபோது, மிகுந்த உறுதியுடன்,

> ... நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகு தலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் (2 தீமோ. 4:6-8) என்று கூறினார்.

பவுல், தாம் மட்டும் அந்த நிச்சயத்தைப் பெற்றுக் கொள்வதாகக் கூறவில்லை என்பதைக் கவனியுங்கள்; அவர், "அவர் பிரசன்னமாகுதலை விரும்புகிற யாவருக்கும்" என்று கூறினார்.

ஆனால் நாம் பரலோகம் செல்கிறோம் என்று எவ்விதத்தில் உறுதியாயிருக்க முடியும்? நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்வதற்கு முன்பாகப் பாவமற்ற வாழ்க்கையை நாம் வாழ வேண்டுமா? அப்படியென்றால், நாம் எல்லாரும் பாவம் செய்துள்ளதால் அந்த நிச்சயத்தை எவ்விதம் பெற முடியும்? பரலோகத்திற்கு நாம் செல்லும் ஒரே வழி தேவனுடைய

கிருபைதான். எடுத்துக்காட்டாக, பவுல், ஒரு நல்ல மனிதராகிய ஒநேசிப்போருவைப் பற்றி, “ஒநேசிப்போருவின் வீட்டா ருக்குக் கர்த்தர் இரக்கங் கட்டளையிடுவாராக; அவன் அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான்; ... அந்நாளிலே அவன் கர்த்தரிடத்தில் இரக்கத்தைக் கண்டடையும்படி, கர்த்தர் அவனுக்கு அனுக்கிரகஞ் செய்வாராக. ...” (2 தீமோ. 1:16, 18) என்று கூறினார். ஒநேசிப்போரு ஒரு நல்ல மனிதராக இருந்தபோதிலும் கர்த்தருடைய நாளில் அவருக்கு கிருபை தேவையாயுள்ளது. அதேபோலத்தான் நாமும்கூட இருக்கி றோம். இதில் ஒரு நற்செய்தி என்னவென்றால், அந்த மாபெரும் நாளில், ஒநேசிப்போருவுக்கு கிருபை கிடைப்பது போலவே, நமக்கும் கிடைக்கும் என்பதேயாகும். கிறிஸ்துவுக்கென்று நம்மால் இயன்ற யாவற்றையும் செய்து முடித்த பின்னரும், நாம் தகுதியற்ற ஊழியக்காரராகவே இருக்கிறோம், ஆனால் தேவனுடைய கிருபையானது நமது குறைகளை நிறைவாக்கும்!

## முடிவுரை

“ஆசீர்வாதம் நிச்சயம்” என்ற பாடலை நாம் பாடும்போது, கிறிஸ்தவர் ஒருவர் கிருபையிலிருந்து விழக்கூடும் என்று நாம் நம்பினாலும், நமக்கு நிச்சயம் ஒன்று உண்டு என்று கூறமுடியுமா? நிச்சயமாய் முடியும் ஏனென்றால், நாம் கடந்த காலத்தில் இரட்சிக்கப்பட்டோம், அன்றாடம் இரட்சிக்கப் பட்டுக்கொண்டிருக்கிறோம், பரலோகத்தில் என்றென் றைக்கும் இரட்சிக்கப்பட்டிருப்போம்!

இதனால், நாம் நமது இரட்சிப்பைக் குறித்துக் கவலையற் றிருக்கலாம் என்று பொருள் அல்ல, நாம் நிச்சயமாகவே ஒளியில் நடக்க வேண்டும் (1 யோவா. 1:7), நமது அழைப் பையும், தெரிந்து கொள்ளுதலையும் உறுதியாக்க வேண்டும் (2 பேது. 1:10), மரணபரியந்தம் உண்மையாயாயிருக்கும்படி நம்மால் முடிந்த யாவற்றையும் செய்ய வேண்டும் (வெளி. 2:10). பின்வாங்கி செல்லும் அல்லது வெதுவெதுப்பான நிலையி லிருக்கும் கிறிஸ்தவர்கள், இப்பொழுது நாம் கவனித்துப் பார்த்த வேதவசனங்களின்படி எந்த ஒரு நிச்சயத்தையும் பெற முடியாது.

ஆனால் உங்களால் இயன்றளவு சிறந்தவைகளைச் செய்தால், தேவனுடைய பிள்ளையாய் இருப்பதில் மாபெரும்

நிச்சயம் ஒன்று உங்களுக்குண்டு.

இதை நான் பின்வரும் வழியில் விளக்க முடியும்: நான் குழந்தையாயிருந்தபோது, என் தகப்பனார் என்னோடிருந்த வேளையில் நான் என்றுமே கவலைப்பட்டதில்லை. அவர் ஏறக்குறைய ஆறடி உயரமானவர், 135 பவுன்டு எடையுள்ளவர், என்னைப் பொறுத்தமட்டில், எந்த ஒரு விஷயத்தையும், எந்த பிரச்சனையையும், எந்த அபாயத்தையும் அவரால் எதிர் கொள்ள முடியும். மேலுமாக, அவர், என்னை நேசித்தார் என்பதையும், எனக்காகத் தம்மால் முடிந்த சிறந்தவைகளைச் செய்தார் என்றும் நான் அறிவேன். எனவே என் அப்பாவுடன் இருந்த நாட்களில் எவ்வித பயமுமின்றி இருந்தேன். மாறாக நிச்சயமுள்ள ஒரு நல்லுணர்வு எனக்கு இருந்தது. நான் வளர்ந்த போதிலும் கூட, என் அப்பாவை ஒரு சக்தி கோபுரமாகவே இன்னும் பார்த்தேன். அவரை நான் இன்னும் சார்ந்திருக்க முடியும் என்று நம்பினேன். எனது வாழ்க்கையில் எது மாறினாலும், அவருடைய பிரசன்னம், மதிப்பீடுகள், மற்றும் அவரது அன்பு ஆகியவை என்றும் நிலையாக இருந்தன. அவைகள் எனக்கு ஒரு நிச்சயத்தைக் கொடுத்தன. அவருடைய அன்பும், சிட்சையும் ஒழுக்கத்தை உள்ளடக்கியிருந்தன. ஆனால், என்னுடைய எல்லா தவறுகளுக்கும் அங்கு மன்னிப்பும் இருந்தது. இதிலும்கூட ஒரு நிச்சயம் இருந்தது. நான் சரியான பாதையை விட்டு விலகி வெகு தூரம் சென்றிருந்த போதிலும், என் அப்பா என் மேலுள்ள அன்பை விடாதிருப்பார், ஆனால் நான்தான் அவருடைய மகன் என்பதில் கிடைக்கும் பலன்களை உதறியவனாயிருப்பேன். ஆனால் இவ்வாறு விலகிப் போகும் செயலைச் செய்ய நான் என்றுமே துணிந்ததில்லை. ஏனென்றால் பெரிய அளவில் அவர் எனக்கு எவ்வளவு நல்லவராயிருந்தாரென்பதையும், எனக்காக அவர் எவ்வளவு தந்துள்ளார் என்பதையும் நான் நன்கறிவேன்.

ஒரு நல்ல தகப்பனைப் பெற்றிருப்பது ஒரு மகனுக்கு இவ்வளவு செய்ய இயலும் என்றால், தேவனை நமது தகப்பனாகப் பெற்றிருக்கையில் அது நமக்கு எவ்வளவு அதிக நிச்சயத்தைத் தர முடியும் (மத். 7:9-11)? நமது தேவன், எனது அப்பாவைக்காட்டிலும், எவ்வளவோ அதிகமான, முடிவில்லாத அன்புள்ளவராயிருக்கிறார், அவர் எந்த ஒரு பிரச்சனையையும் எதிர்கொள்ள வல்லவராயிருக்கிறார், வாழ்க்கையின் மாறுபட்ட சூழ்நிலைகள் எல்லாற்றிலும் அவர்

*மாறாதவராயிருக்கிறார். இது ஒரு ஆச்சரியமான நிச்சயமல்லவா?*

*நாம் தவறு செய்யும்போது, அவரை வருத்தப்படுத்தினாலும், அவர் எப்பொழுதும் மன்னிக்கச் சித்தமுள்ளவராயிருக்கிறார். நாம் வெகுதூரம் விலகிப்போய், நமது தகப்பனின் அறிவுரைகளை முற்றிலும் மறுத்துவிட்டாலும், அவர் நம்மில் அன்பு காட்டுவதில் மாறுபடுவதில்லை, ஆனால் அவருடைய மகனாயிருப்பதில் உள்ள பலன்களை நாம்தான் மறுதலிக்கிறவர்களாயிருப்போம்.*

*ஆம், தேவன் நமது தகப்பன்; நாம் அவரது குடும்பத்தார்! அது நிச்சயம்!*

*நீங்கள் கிறிஸ்தவராக இல்லையென்றால், நீங்களும், விசுவாசித்து, கீழ்ப்படிந்து தேவனுடைய பிள்ளையாகும்போது இந்த நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்! (கலா. 3:26, 27).*